மாதத்தில் முடிந்து விடும் என்று மாவட்ட ஆட்சியாளர் பதில் தந்து இருக்கிறார். மேற்கொண்டு குறிப்பு, ஏதும் இங்கே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கை அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. நா. கணபதி) : தலைவரவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது (ஐந்தாம் சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(3) தகவல் கோரல்

(அ) எல்.ஐ.சி. கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்து சம்பந்தமான விசாரணை குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Sir, Yesterday, news appeared in the Press about the statement of the I.G. of Police about the fire that broke out in the L.I.C. building. The House has not been informed about the cause of the fire and the steps taken for investigating it. We would like to know whether the Government would be in a position to tell this House, about the type of investigation which is going on and the details of the fire accident ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்.ஐ.சி. விபத்தைப்பற்றி அரசாங்கத் தரப்பில் அறிக்கை ஏதேனும் தர இருக்கிறார்களா என்று கேட்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எல்.ஐ.சி.யில் ஏற்பட்ட விபத்து குறித்து இன்வெஸ்டிகேஷன் நடப்பதாக ஐ.ஜி. அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள், அது சம்பந்தமான விசாரணையை மத்திய அரசாங்கம் செய்கிறதா, மாநில அரசாங்கம்

செய்கிறதா, சர்க்கார் அது சம்பந்தமாக ஏதேனும் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில அரசின் சி.ஐ.டி. இலாகா அங்கே அந்த விசாரணையை நடத்தினார்கள். அவர்கள் அது பற்றி ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். இறுதி அறிக்கை வந்தவுடன் அந்த ரிப்போர்ட் மத்திய அரசின் சி.ஐ.டி. டிபார்ட்மெண்ட்டிற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் கருத்துக்கு விடப்படும்.

(ஆ) பாதுகாப்புத் துறை ஜீப்கள் உறுப்பினர்களுக்கு விற்கப்படுவது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அனதர் பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்றையதினம் டிபன்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து அங்கத்தினர்களுக்கு ஜீப் விலைக்குத் தருவதாக அறிக்கை வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்? உறுப்பினர்கள் வேண்டுமானால் ஏலம் கேட்டு எடுத்துக்கொள்ளலாம். நமக்கு வந்த தகவலை உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறோமே தவிர, உறுப்பினர்களுக்குத் தேவையானால் ஏலம் கேட்டு எடுத்துக்கொள்ளலாம். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

(4) அரசினர் தனித் தீர்மானம்.

தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, உங்கள் திருத்தத்தின்மீது பேசுகிறீர்களா ?

திரு. கே. டி. கே. தங்கமணி: அரசினர் தீர்மானத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள விவரம் சம்பந்தமாக அரசு